# Court of the District Munsif cum Judicial Magistrate No.I, Usilampatti.

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | : | **CC . 118/2019** | | |
| **PW/DW/CW** | : | **PW2** | | |
| **Name** | : | காசிநாதன் | **Caste** | : |
| **Father's/ Husband's Name** | : | கிருஷ்ணன் | **Calling** | : |
| **Village** | : | | **Religion** | : |
| **Taluk** | : | | **Age** | : |

( Accused absent u/s. 355 of BNSS petition filed and allowed)

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 20.01.2025

---

**முதல் விசாரணை:**

நான் வில்லாணியில் குடியிருந்து வருகிறேன். நான் ஸ்ரீராம் அடகு கடை பைனான்ஸ் கடை வைத்துள்ளேன். இவ்வழக்கில் இறந்துபோன ராமர் எனது உடன்பிறந்த சகோதரர் ஆவார். கடந்த 07.04.2019ம் தேதியன்று எனது அண்ணன் மற்றும் எனது குழந்தைகளுடன் நேத்தி கடன் செலுத்துவதற்காக கருமாத்தூரிலுள்ள கழுவநாதன் கோவிலுக்கு நான், எனது அப்பா, எனது மனைவி, எனது அண்ணன், அண்ணி ஆகியோர்கள் மற்றும் உறவினர்களுடன் சென்றோம். நேத்திகடன் செலுத்திவிட்டு அன்றைய தினம் மாலை 3.15 – 3.30 மணியளவில் கோவிலிருந்து வீட்டிற்கு வந்து கொண்டிருந்த போது தி.விலக்கு அருகே நான், எனது மனைவி, எனது அண்ணி எனது குழந்தைகள் மற்றும் எனது அண்ணன் குழந்தைகளுடன் ஆட்டோவில் ஆட்டோ ஓட்டுநருடன் வந்து கொண்டிருந்தோம். எனது அண்ணன் அவரது இருசக்கர வாகனமான சூப்பர்ஸ்பிளேண்டர் TN 58 AW 5227 என்ற வாகனத்தில் உசிலம்பட்டி நோக்கி வந்து கிழக்கிலிருந்து மேற்காக எங்களுக்கு முன்பாக வந்து கொண்டிருந்தார்.

2) அப்போது மேற்கிலிருந்து கிழக்காக லாரி ஒன்று எந்தவித சைகையும் காட்டாமல், ஹாரன் அடிக்காமல், இண்டிகேட்டர் போடாமல் அதன் ஓட்டுநர் திடீரென லாரியை திருப்பியதால் லாரி எனது அண்ணன் சென்ற சூப்பர்ஸ்பிளேண்டர் TN 58 AW 5227 என்ற வாகனத்தில் மோதி விபத்து ஏற்பட்டது. அதன்பின்பு அவரை போய் பார்த்போது அவருக்கு நெஞ்சு, தலை, காது ஆகிய இடங்களில் பலத்த இரத்தக்காயம் ஏற்பட்டது. அதன்பின்பு அந்த வழியாக வந்த காரில் எனது அண்ணனை ஏற்றி கொண்டு உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு

கொண்டு சென்றோம். அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர் அதிகமான இரத்தபோக்கு காரணமாக அவர் இறந்துவிட்டதாக எங்களிடம் கூறினார். பின்னர் நகர் காவல் நிலையத்தில் எனது அண்ணி புகார் கொடுத்தார். மறுநாள் எனது அண்ணன் பிரேதத்தை பெற்றுக்கொண்டு நல்லடக்கம் செய்தோம். எனது அண்ணனை அடித்து விபத்து ஏற்படுத்திய லாரியின் எண் TN 28 C 1699 ஆகும், அதன் ஓட்டுநர் இராமநாதபுரத்தை சேர்ந்த சத்தியசுந்தரம் ஆவார். சம்பவம் நடந்த இடத்தில் மேற்படி சத்தியசுந்தரத்தை நான் பார்தேன். தற்போது அவரை பார்த்ததால் அவரை என்னால் அடையாளம் காண்பிக்க முடியும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

கழுவநாதன் கோவில் வில்லாணியிலிருந்து 25 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். நான் அன்றைய தினம் காலை 5.00 மணிக்கு கோவிலுக்கு சென்றோம். அன்றைய தினம் கோவிலுக்கு ஆட்டோவில் 3 குழந்தை மற்றும் 3 பெரியோர்கள் சென்றோம். அன்றைய தினம் எனது அண்ணனுடன் அவரது மனைவி மற்றும் அவரது குழந்தைகள் எதற்காக செல்லவில்லை என்றால் அவர் முன்பாக சென்று கோவிலில் ஏற்பாடுகள் செய்வதற்காக முன்னால் சென்றார். கோவிலிருந்து மாலை 2.30 –2.45 மணிக்கு கிளம்பிவிட்டோம். எங்களுக்கு முன்பாக 100 மீட்டர் இடைவெளியில் எனது அண்ணன் சென்று கொண்டிருந்தார். வரும்போது நாங்கள் அனைவரும் அதே ஆட்டோவில் வந்தோம். ஆட்டோவை விட பைக் வேகமாக செல்லக் கூடியது என்றால் சரிதான்.

4) சம்பவ நடந்த சமயம் 3.30 –3.45 மணியிருக்கும். நான் ஆட்டோவில் இருந்ததால் விபத்தை நேரடியாக பார்க்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல நான் பார்த்தேன். விபத்து நடந்த சாலை அகலமான சாலை என்றால் தற்போது உள்ளஅளவிற்கு விபத்து நடந்த சமயத்தில் அதிகமாக இல்லை. விபத்து நடந்த இடத்தில் அதிகமான கடைகள் உள்ளன என்றால் விபத்து சமயத்தில் அதிகமாக இல்லை. விபத்து நடந்த சமயத்தில் எனது அண்ணனின் வாகனம் லாரியின் பின்பக்கம் மோதியது என்றால் சரிதான். லாரியை ஓட்டி வந்த நபர் திடீரென திருப்பியதால் விபத்து ஏற்பட்டது. எனது அண்ணன் ரோட்டின் தெற்குபுறம் விழுந்து கிடந்தார் என்றால் சரியல்ல சாலையின் மைய பகுதியில் விழுந்து கிடந்தார். எனது அண்ணன் மைய பகுதியில் விழவில்லை என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5) நான் மருத்துவமனை செல்லும் போது சுமார் 4.00 மணியிருக்கும். நாங்கள் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம் புகாரை வழக்கறிஞர் எழுதி கொடுத்தார். அதன்பின்பு போலீசார்

விசாரிக்கவில்லை. இழப்பீடு கேட்டு வழக்கு போட்டுள்ளேன். எனது சகோதரர் எதிரியின் வாகனத்தை கவனிக்காமல் இருசக்கர வாகனத்தில் வேகமாக ஓட்டி வந்து லாரி பின்பகுதியில் மோதி விபத்து ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல., நாங்கள் இழப்பீடு பெற வேண்டும் என்பதற்காக உண்மை சம்பவத்தை மறைத்து எதிரியின் மீது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

S.d./Kasimayan
Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. S.Maharajan
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.